## மாமன்றக் கூட்டம்

| | | |
|---|---|---|
| **கோப்பு எண்** | - | **ந.க.எண் 2422/2018/ எம்.சி. 8 )** |
| **நாள்** | - | **04 .04.2018 பிற்பகல் 4.30 மணி** |
| **தலைமை** | - | **டாக்டர் க. விஜயகார்த்திகேயன், இ.ஆ.ப.,<br>ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி,<br>கோயம்புத்தூர் மாநகராட்சி** |
| **கலந்துகொண்டோர்** | - | **துணை ஆணையர்,<br>அனைத்து துறை தலைமைகள்,<br>அனைத்து மண்டல உதவி ஆணையர்கள்** |

---

### பொருள் எண் 1

பார்வை:- 1. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர், தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் கட்டுமான வளர்ச்சி கழகம், சென்னை அவர்களின் க.எண் TUFIDCO/ AMRUT/ CBE/ 806/ AM(M)/2017 நாள். 02.04.2018.

*********

பார்வையில் கண்ட கடிதத்தில் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர், தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் கட்டுமான வளர்ச்சி கழகம், சென்னை அவர்களால் கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட இணைக்கப்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோக வளர்ச்சி திட்டத்தினை பவானி நதியை நீர் ஆதாரமாக கொண்டு செயல்படுத்திட AMRUT 2017-20 (பில்லூர் 3) திட்டத்தில் ரூ.649.30 கோடியில் SLHPSC 23.03.2018 அன்று அனுமதி வழங்கப்பட்டது.

மேற்படி அனுமதிக்கப்பட்ட பங்கு தொகையின் அட்டவணை கீழ்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளது.

(ரூ. கோடியில்)

| திட்டத்தின் பெயர்/திட்ட எண் | அனுமதிக்கப் பட்ட தொகை | இந்தியா அரசு பங்குத்தொகை (33% ) | தமிழ்நாடு அரசு பங்குத் தொகை (20% ) | மாநகராட்சியின்* பங்குத்தொகை (47%) |
|---|---|---|---|---|
| கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட இணைக்கப்பட்ட பகுதிகளில் பவானி நதியை நீர் ஆதாரமாக கொண்டு குடிநீர் விநியோக வளர்ச்சி திட்டம் / திட்ட எண் AMRUT III-36 | **649.30** | **214.27** | **129.86** | **305.17** |

(* மாநகராட்சியின் முழு பங்குத் தொகையான ரூ.305.17 கோடியை ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) / TNUIFSL மூலம் கடன் பெற்று நிதியினை ஏற்றுக்கொள்ள வேண்டும்)

மேலும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், PF டிவிசன், கோயம்புத்தூர் அவர்களால் மேற்கண்ட திட்டத்திற்கான திருத்திய மதிப்பீடு ரூ.740.15 கோடிக்கு தயாரிக்கப்பட்டு அதற்குண்டான பங்குத் தொகையினை கீழ்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளது.

(ரூ. கோடியில்)

| திட்டத்தின் பெயர்/திட்ட எண் | தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் திருத்திய மதிப்பீடு | அனுமதிக்க பட்ட தொகை | இந்தியா அரசு பங்குத்தொகை (33% ) | தமிழ்நாடு அரசு பங்குத் தொகை (20% ) | மாநகராட்சியின்* பங்குத்தொகை |
|---|---|---|---|---|---|
| கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட இணைக்கப்பட்ட பகுதிகளில் பவானி நதியை நீர் ஆதாரமாக கொண்டு குடிநீர் விநியோக வளர்ச்சி திட்டம் /திட்ட எண் AMRUT III-36 | **740.15** | **649.30** | **214.27** | **129.86** | **396.02** |

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட இணைக்கப்பட்ட பகுதிகளில் பவானி நதியை நீர் ஆதாரமாக கொண்டு குடிநீர் விநியோக வளர்ச்சி திட்ட பணிக்காக மதிப்பீடு ரூ.**740.15** கோடிக்கும் மற்றும் ஒரு வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு மதிப்பீட்டு தொகையாக ரூ.**20.18** கோடியும் அரசின் நிர்வாக அனுமதிக்காக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் மூலமாக அரசின் பரிந்துரைக்கு அனுப்ப மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:அனுமதிக்கலாம் ந.க.எண் **1987/2010/** ப.வ.(பி)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 79 நாள் 04.04.2018</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 2**

**பொருள் :** கோவை மாநகராட்சி - வடக்கு மண்டலம் - வார்டு எண் 41 ல் புதிதாக கட்டப்பட்டுள்ள மாநகராட்சி சமுதாயக் கூடத்திற்கு வாடகை நிர்ணயம் செய்து பொது மக்களின் பயன்பாட்டிற்கு விடுவது - தொடர்பாக.

**பார்வை :** உதவி பொறியாளர் அவர்களின் குறிப்பு நாள் 19.01.2018

*******

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 41ல் வ.ஊ.சி நகர் பகுதியில் வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து சமுதாய கூடம் ரூ30.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு பயன்படுத்தும் நிலையில் உள்ளது.

மேற்படி 719.52 ச.அடி கட்டிடப்பரப்பளவு கொண்ட சமுதாயக் கூடத்திற்கு பொதுப்பணித்துறை மதிப்பீட்டில் நாளொன்றுக்கு வாடகையாக ரூ.1500/- நிர்ணயம் செய்யலாம் என உதவி நிர்வாக பொறியாளரின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி சமுதாய கூடத்தின் முன்பாக இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துவதற்கு வசதியாக சுமார் 10000 ச.அடி பரப்பளவு கொண்ட காலியிடம் அமைந்துள்ளதால் மேற்படி மண்டபத்திற்கு தின வாடகையாக ரூ.2500/- நிர்ணயம் செய்யலாம்.

எனவே மேற்படி சமுதாயக் கூடத்திற்கு பொதுப்பணித் துறை மதிப்பின் அடிப்படையில் நாளொன்றுக்கு ரூ.2500/- வீதம் வாடகையும், வைப்பு தொகையாக ரூ.1500/-ம் நிர்ணயம் செய்து பொது மக்களின் பயன்பாட்டிற்கு ஒதுக்கீடு செய்வதற்கு மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 8417/2012/ ஏ1

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 80 நாள் 04.04.2018</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 3**

**பொருள்** : கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம் - வார்டு எண் 44 அன்னையப்பன் வீதியில் உள்ள அரசு ஆரம்ப பள்ளிக்கு அருகில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான காலி அறையை நூலகத்திற்கு மாத வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்வது - தொடர்பாக

**பார்வை** :
1. திரு.நா.மணிகண்டன் மாவட்ட நூலக அலுவலர், மாவட்ட நூலக ஆணைக்குழு கோவை அவர்களின் கடித நாள் 12.12.2017
2. மாநகராட்சி உதவி நிர்வாக பொறியாளர் அவர்களின் குறிப்பு நாள் 20.02.2018

*****

பார்வையில் கண்ட மாவட்ட நூலக அலுவலர் அவர்களின் கடிதத்தில் கோயம்புத்தூர் மாவட்ட நூலக ஆணைக்குழுவின் கீழ் செயல்பாட்டு வரும் கண்ணப்ப நகர் ஊர்புற நூலகம் தற்போது சங்கமம் பள்ளி வளாகத்தில் உள்ள சிறிய கட்டிடத்தில் செயல்பட்டு வருவதாகவும் நூலக கட்டிடமானது சிறியதாக உள்ளதால் பொது மக்களுக்கு மிகவும் சிரமமாக உள்ளதாலும் எனவே தற்போது நூலகம் செயல்பட்டு வரும் இடத்திலிருந்து 0.5 கி.மீ தொலைவில் உள்ள வார்டு எண் 44 அன்னையப்பன் வீதியில் உள்ள அரசு ஆரம்பப் பள்ளிக்கு அருகில் இருக்கும் மாநகராட்சிக்கு சொந்தமான காலி அறையில் நூலகத்தை மாற்றி செயல்படுத்த அனுமதி வழங்குமாறு கோரியுள்ளார்.

பார்வை (2)ல் கானும் உதவி நிர்வாக பொறியாளர், வடக்கு மண்டலம் அவர்களின் குறிப்பில் 276.66 ச.அடி பரப்பளவு கொண்ட மேற்படி கட்டிடத்திற்கு மாத வாடகையாக ரூ.3900/- நிர்ணயம் செய்யலாம் என அறிக்கை அளித்துள்ளார்.

தற்போது நூலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படும் இந்த கட்டிடம் 276.66 ச.அடி பரப்பளவு கொண்டது மாநகராட்சி மற்ற மண்டலங்களில் அமைந்துள்ள நூலகங்களுக்கு மாத வாடகையாக ரூ.500/- மட்டுமே மாமன்ற ஒப்புதலுடன் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

எனவே வார்டு எண் 44-ல் அன்னையப்பன் வீதியில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்திற்கு புதிய நூலகம் அமைக்க மாத வாடகையாக ரூ.500/- வீதம் நிர்ணயம் செய்து மாவட்ட நூலக ஆணை குழுவிற்கு ஒப்படை செய்ய மாமன்ற பொருள் ஒப்பதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 10475/2017/ A1 (வ)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 81 நாள் 04.04.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 4**

கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண் – 36 க்குட்பட்ட பத்மநாபன் நகரில் மழை நீர் வடிகால் கட்டுதல் மற்றும் சிறுபாலம், மூடுபலகை அமைத்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.24,70,000/–க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கலாம். ந.க.எண் 2819/2018/எம்.டி. 3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 82 நாள் 04.04.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 5**

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ எண் | பணியின் பெயர் | மதிப்பீட் தொகை ரூ லட்சத்தில் | நிர்வாக அனுமதி நாள் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.68,70 மற்றும் 73–க்குட்பட்ட பகுதிகளில் தார் ஒட்டு போடுதல்.<br>ந.க.எண்.10946/2017/எம்.டி.5 | 12.00 | ம.தீ.எண் .298 நாள் 14.12.17 | 16.02.18 முதலாம் அழைப்பு | 1). தி/ள் எஸ்.பி பில்டர்ஸ் 6.08% அதிகம்<br>2). திரு.ஜே.ராபர்ட் ராஜா 0.05% குறைவு | திரு.ஜே.ராபர்ட் ராஜா 0.05% குறைவு |
| 2 | வார்டு எண்.25,80,81,83,84–க்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு மின்சார வாரியம் கேபிள் பதிக்கப்பட்ட இடங்களில் தார் ஒட்டு போடுதல்.<br>ந.க.எண். 10950/2017/எம்டி.5 | 39.80 | ம.தீ.எண். 298 நாள் 14.12.17 | 16.02.18 முதலாம் அழைப்பு | 1). தி/ள் எஸ்.பி பில்டர்ஸ் 6.08% அதிகம்<br>2). தி/ள் பி.செந்தில் அன் கோ மதிப்பீட்டுத்தொகை | தி/ள் பி.செந்தில் அன் கோ மதிப்பீட்டுத் தொகை |
| 3 | வார்டு எண்.71 மற்றும் 72–க்குட்பட்ட பகுதிகளில் தார் ஒட்டு போடுதல்.<br>ந.க.எண்.10947/2017/எம்.டி.5 | 12.00 | ம.தீ.எண். 298 நாள் 14.12.17 | 16.02.18 முதலாம் அழைப்பு | 1). திரு.ஏ.ராஜு 2.15% குறைவு<br>2).திரு.ஜி அசோக்குமார் 0.42% குறைவு | திரு.ஏ.ராஜு 2.15% குறைவு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4 | <u>சட்ட மன்ற உறுப்பினர் நிதி</u><br>**2017-18**<br>வார்டு எண்–32 க்குட்பட்ட விளாங்குறிச்சி பகுதியில் குடிநீர் குழாய் பதித்த இடங்களில் மறு தார்தளம் அமைத்தல்.<br>ந.க.எண். 9873/2017/எம்டி.5 | 28.00 | மா.ஆ.உ. நாள் 22.11.17 | 15.02.18 முதலாம் அழைப்பு | 1).திரு.ஏ. வெங்கடாசலம்<br>17.13% அதிகம்<br><br>2). தி/ள் காடையீஸ்வரி அன் கோ<br>2.06% அதிகம் | தி/ள் காடையீஸ்வரி அன் கோ<br>0.04% குறைவு<br>(விலை குறைப்பிற்குப்பின்) |
| 5 | <u>சட்ட மன்ற உறுப்பினர் நிதி</u><br>**2017-18**<br>வார்டு எண்–9க்குட்பட்ட ஹவுசிங்யூனிட் நடுநிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பு கட்டிடம் கட்டுதல்.<br>ந.க.எண். 10329/2017/எம்டி.5 | 23.00 | மா.ஆ.உ. நாள் 18.12.17 | 15.02.18 முதலாம் அழைப்பு | 1).திரு.என். குருவாயூரப்பன்<br>4.98% அதிகம்<br><br>2). திரு.பி.எம். மாரிமுத்து<br>9.69% அதிகம் | திரு.என். குருவாயூரப்பன்<br>0.04% குறைவு<br>(விலை குறைப்பிற்குப்பின்) |
| 6 | <u>சட்ட மன்ற உறுப்பினர் நிதி</u><br>**2017-18**<br>வார்டு எண்–84 க்குட்பட்ட உக்கடம் பகுதியில் உள்ள சி.எம்.சி காலனியில் 2000 LPH மேல்நிலை தொட்டி அமைத்து, RO plant, Wending Machine மற்றும் ஆழ்குழாய் கிணறு அமைத்தல்.<br>ந.க.எண். 53/2018/எம்.டி.5 | 18.00 | மா.ஆ.உ. நாள் 11.01.18 | 15.02.18 முதலாம் அழைப்பு | 1).தி/ள் ஸ்மார்ட் ஜோன் இன்டஸ்ட்ரீஸ்<br>8.11% அதிகம்<br><br>2). தி/ள் ஸ்வாட் அக்வாடெக்<br>0.0002% குறைவு | தி/ள் ஸ்வாட் அக்வாடெக்<br>0.0002% குறைவு |
| 7 | <u>சட்ட மன்ற உறுப்பினர் நிதி</u><br>**2017-18**<br>வார்டு எண்–22 க்குட்பட்ட காமராஜபுரம் பகுதியில் உள்ள சி.எம்.சி காலனியில் 2000 LPH மேல்நிலை தொட்டி அமைத்து, RO plant, Wending Machine மற்றும் ஆழ்குழாய் கிணறு அமைத்தல்.<br>ந.க.எண். 10230/2017/எம்.டி.5 | 18.00 | மா.ஆ.உ. நாள் 11.01.18 | 15.02.18 முதலாம் அழைப்பு | 1).தி/ள் ஸ்மார்ட் ஜோன் இன்டஸ்ட்ரீஸ்<br>8.11% அதிகம்<br><br>2). தி/ள் ஸ்வாட் அக்வாடெக் மதிப்பீட்டுத்தொகை | தி/ள் ஸ்வாட் அக்வாடெக் மதிப்பீட்டுத் தொகை |
| 8 | <u>சட்ட மன்ற உறுப்பினர் நிதி</u><br>**2017-18**<br>வார்டு எண்–82 க்குட்பட்ட பொது பணித்துறை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி பேருந்து நிலையம் அருகில் 2000 LPH மேல்நிலை தொட்டி அமைத்து, RO plant, Wending Machine மற்றும் ஆழ்குழாய் கிணறு அமைத்தல்.<br>ந.க.எண். 51/2018/எம்.டி.5 | 18.00 | மா.ஆ.உ. நாள் 11.01.18 | 15.02.18 முதலாம் அழைப்பு | 1). தி/ள் ஸ்மார்ட் ஜோன் இன்டஸ்ட்ரீஸ்<br>8.11% அதிகம்<br><br>2). தி/ள் ஸ்வாட் அக்வாடெக் மதிப்பீட்டுத்தொகை | தி/ள் ஸ்வாட் அக்வாடெக் மதிப்பீட்டுத் தொகை |
| 9 | <u>சட்ட மன்ற உறுப்பினர் நிதி</u><br>**2017-18**<br>வார்டு எண்–84 க்குட்பட்ட வெரைட்டி ஹால் ரோடு பகுதியில் உள்ள சி.எம்.சி காலனியில் 2000 LPH மேல்நிலை தொட்டி அமைத்து, RO plant, Wending Machine மற்றும் ஆழ்குழாய் கிணறு அமைத்தல்.<br>ந.க.எண். 52/2018/எம்.டி.5 | 18.00 | மா.ஆ.உ. நாள் 11.01.18 | 15.02.18 முதலாம் அழைப்பு | 1). தி/ள் ஸ்மார்ட் ஜோன் இன்டஸ்ட்ரீஸ்<br>8.11% அதிகம்<br><br>2). தி/ள் ஸ்வாட் அக்வாடெக் மதிப்பீட்டுத்தொகை | தி/ள் ஸ்வாட் அக்வாடெக் மதிப்பீட்டுத் தொகை |
| 10 | வார்டு எண் 80 க்குட்பட்ட சுக்கரவார் பேட்டை மெயின் சாலையில் பழுதடைந்த பாதாள சாக்கடை குழாயை மாற்றி புதிய பாதாள சாக்கடை தொட்டி கட்டுதல்.<br>ந.க.எண். 2880/2017/எம்.டி.5 | 14.00 | ம.தீ.எண்.5 68 நாள் 27.03.17 | 06.03.18 முதலாம் அழைப்பு | 1).தி/ள். ஸ்ரீ குருவாயூரப்பன் அன் கோ<br>0.48% குறைவு<br><br>2).திரு.கே.சுந்தரம் மதிப்பீட்டுத்தொகை | தி/ள்.ஸ்ரீ குருவாயூரப்பன் அன் கோ<br>0.48% குறைவு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 11 | காந்திபுரம் 5 வது வீதி முதல் 7வது வீதி வரை பழுதடைந்த தார்சாலைகளுக்கு தார் பேட்ச் செய்தல்.<br>ந.க.எண். 951/2018/எம்.டி.5 | 10.00 | ம.தீ.எண். 12 நாள் 29.01.18 | 27.02.18 முதலாம் அழைப்பு | 1). திரு.ஏ.ராஜு 0.67% குறைவு<br>2).திரு.ஜி அசோக்குமார் 1.28% அதிகம் | திரு.ஏ.ராஜு 0.67% குறைவு |
| 12 | காந்திபுரம் 8 வது வீதி முதல் 10வது வீதி வரை பழுதடைந்த தார்சாலைகளுக்கு தார் பேட்ச் செய்தல்.<br>ந.க.எண். 952/2018/எம்.டி.5 | 10.00 | ம.தீ.எண். 12 நாள் 29.01.18 | 27.02.18 முதலாம் அழைப்பு | 1). திரு.ஏ.ராஜு 0.77% குறைவு<br>2).திரு.ஜி அசோக்குமார் 1.30% குறைவு | திரு.ஏ.ராஜு 0.77% குறைவு |
| 13 | ஹட்கோ காலனி 1 முதல் 8 வரை உள்ள சாலைகளுக்கு தார்பேட்ச் செய்தல்.<br>ந.க.எண். 950/2018/எம்.டி.5 | 10.00 | ம.தீ.எண். 12 நாள் 29.01.18 | 27.02.18 முதலாம் அழைப்பு | 1). திரு. ஜே.ராபர்ட் ராஜா 0.07% குறைவு<br>2).தி/ள் ஜெயம் கன்ஸ்ட்ரக்சன்ஸ் 2.01% அதிகம் | திரு. ஜே.ராபர்ட் ராஜா 0.07% குறைவு |
| 14 | வார்டு எண் 49 க்குட்பட்ட இரத்தினபுரி மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் உள்ள மாணவர்கள் கழிப்பறை பராமரித்தல் மற்றும் கழிப்பறை கட்டுதல்.<br>ந.க.எண். 1095/2018/எம்.டி.5 | 15.00 | ம.தீ.எண். 15 நாள் 29.01.18 | 27.02.18 முதலாம் அழைப்பு | 1). திரு. எம்.தண்டபாணி 2.23% குறைவு<br>2). திரு .ஜி.அருள்குமரன் 2.14% குறைவு | திரு. எம்.தண்டபாணி 2.23% குறைவு |
| 15 | வார்டு எண் 80 க்குட்பட்ட தாமஸ் வீதி. இடையர் வீதி உப்பார சந்து, மா.ந.கவீதி. சுக்கிரவார் பேட்டை சாலை மற்றும் தியாகி குமரன் வீதி சாலைகளில் தார் ஒட்டு போடுதல்.<br>ந.க.எண். 1010/2018/எம்.டி.5 | 20.00 | ம.தீ.எண். 12 நாள் 29.01.18 | 27.02.18 முதலாம் அழைப்பு | 1). திரு.ஏ.ராஜு 1.12% அதிகம்<br>2).திரு.ஜி அசோக்குமார் 0.69% குறைவு | திரு.ஜி அசோக்குமார் 0.69% குறைவு |
| 16 | சட்ட மன்ற உறுப்பினர் நிதி 2017-18<br>வார்டு எண்–61க்குட்பட்ட நொய்யல் நகர் பகுதியில் பூங்கா அமைத்தல். ந.க.எண். 10110/2017/எம்டி.5 | 10.00 | மா.ஆ.உ. நாள் 13.12.17 | 18.01.18 முதலாம் அழைப்பு | 1). திரு.ஜி அருள்குமரன் 0.05% குறைவு<br>2). திருமதி.எஸ். மணிமேகலை 0.36% குறைவு | திருமதி.எஸ். மணிமேகலை 0.36% குறைவு |
| 17 | வார்டு எண் 52க்குட்பட்ட அம்பிகா லே அவுட், என் சி என் வீதி பகுதியில் தார் ஒட்டு போடுதல்.<br>ந.க.எண். 955/2018/எம்டி.5 | 10.00 | ம.தீ.எண். 12 நாள் 29.01.18 | 02.03.18 முதலாம் அழைப்பு | 1). திரு.ஏ.ராஜு 0.67% குறைவு<br>2).திரு.ஜி அசோக்குமார் 1.35% அதிகம் | திரு.ஏ.ராஜு 0.67% குறைவு |
| 18 | பாரளுமன்ற உறுப்பினர் நிதி **2017-18**<br>வார்டு எண்–28க்குட்பட்ட கீரணத்தம் பி.பி.ஜி காலேஜ் முதல் வி.கே.வி நஞ்சப்பா நகர் வரை தார்தளம் அமைத்தல் ந.க.எண். 403/2018/எம்டி.5 | 75.00 | மா.ஆ.உ. நாள் 05.02.18 | 06.03.18 முதலாம் அழைப்பு | 1). திரு. சி.கே.சுந்தரம் 0.92% குறைவு<br>2). தி/ள் கே எஸ் ஆர் அன் கோ 0.42% குறைவு | திரு. சி.கே.சுந்தரம் 0.92% குறைவு |
| 19 | வார்டு எண் 51 க்குட்பட்ட ராஜாஜி சாலை மற்றும் நேரு வீதிகளுக்கு தார்பேட்ச் போடுதல்.<br>ந.க.எண். 954/2018/எம்டி.5 | 7.00 | ம.தீ.எண். 12 நாள் 29.01.18 | 27.02.18 முதலாம் அழைப்பு | 1). திரு.ஏ.ராஜு 0.52% குறைவு<br>2).திரு.ஜி அசோக்குமார் 0.27% அதிகம் | திரு.ஏ.ராஜு 0.52% குறைவு |
| 20 | வார்டு எண் 52 க்குட்பட்ட காந்திபுரம் வீதி எண் 1 & 2, சாஸ்திரி நகர் மற்றும் ராதா கிருஷ்ணன் ரோடு பகுதியில் தார் ஒட்டு போடுதல்.<br>ந.க.எண். 956/2018/எம்டி.5 | 10.00 | ம.தீ.எண். 12 நாள் 29.01.18 | 02.03.18 முதலாம் அழைப்பு | 1). திரு. ஜே.ராபர்ட் ராஜா 0.04% குறைவு<br>2).தி/ள் ஜெயம் கன்ஸ்ட்ரக்சன்ஸ் 1.96% அதிகம் | திரு. ஜே.ராபர்ட் ராஜா 0.04% குறைவு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 21 | வார்டு எண் 52 க்குட்பட்ட இளங்கோ நகர் பகுதியில் சிமெண்ட் சாலைகளை புதுப்பித்தல்.<br><br>ந.க.எண். 957/2018/எம்டி.5 | 10.00 | ம.தீ.எண். 12 நாள் 29.01.18 | 02.03.18 முதலாம் அழைப்பு | 1).திரு. கே.செல்வராஜ் 0.01% குறைவு<br><br>2). தி/ள் கே பி கன்ஸ்ட்ரக்சன் 0.60% அதிகம் | திரு. கே.செல்வராஜ் 0.01% குறைவு |
| 22 | வார்டு எண் 81 க்குட்பட்ட கூட்செட் சாலையில் மேம்பாலம் முதல் வீ.எச் சாலை வரை உள்ள பழுதடைந்து பாதாள சாக்கடை குழாய்கள் மாற்றியமைத்தல் மற்றும் சேம்பர்கள் புதுப்பித்தல்.<br><br>ந.க.எண். 4194/2017/எம்டி.5 | 65.00 | ம.தீ.எண். 71 நாள் 12.05.17 | 06.03.18 முதலாம் அழைப்பு | 1). திரு. கே.முருகேசன் மதிப்பீட்டுத்தொகை<br><br>2). திரு.கே.சுந்தரம் 0.12% குறைவு | திரு.கே.சுந்தரம் 0.12% குறைவு |
| 23 | வார்டு எண் 81 க்குட்பட்ட கூட்செட் சாலையில் வீ.எச் சாலை முதல் தெற்காக உள்ள பழுதடைந்து பாதாள சாக்கடை குழாய்கள் மாற்றியமைத்தல் மற்றும் சேம்பர்கள் புதுப்பித்தல்.<br><br>ந.க.எண். 4196/2017/எம்டி.5 | 65.00 | ம.தீ.எண். 71 நாள் 12.05.17 | 06.03.18 முதலாம் அழைப்பு | 1). திரு. கே.முருகேசன் மதிப்பீட்டுத்தொகை<br><br>2). திரு.கே.சுந்தரம் 0.12% குறைவு | திரு.கே.சுந்தரம் 0.12% குறைவு |
| 24 | வார்டு எண் 71 க்குட்பட்ட நிர்மலா கல்லூரி சாலையில் தடுப்புச்சுவர் மற்றும் மழைநீர் வடிகால் திரும்ப கட்டும் பணி செய்தல்.<br>ந.க.எண். 966/2018/எம்டி.5 | 9.60 | ம.தீ.எண். 12 நாள் 29.01.18 | 05.03.18 முதலாம் அழைப்பு | 1).திரு.கே.வி.கே செந்தில் நாதன் 0.42% அதிகம்<br><br>2). தி/ள் சிட்டி டெவலப்பர்ஸ் 0.13% குறைவு | தி/ள் சிட்டி டெவலப்பர்ஸ் 0.13% குறைவு |
| 25 | வார்டு எண் 81 க்குட்பட்ட கூட்செட் சாலையில் பெரிய கடை வீதி முதல் வடக்காக உள்ள பழுதடைந்து பாதாள சாக்கடை குழாய்கள் மாற்றியமைத்தல் மற்றும் சேம்பர்கள் புதுப்பித்தல்.<br>ந.க.எண். 4195/2017/எம்டி.5 | 65.00 | ம.தீ.எண். 71 நாள் 12.05.17 | 06.03.18 முதலாம் அழைப்பு | 1). திரு. கே.முருகேசன் மதிப்பீட்டுத்தொகை<br><br>2). திரு.கே.சுந்தரம் 0.12% குறைவு | திரு.கே.சுந்தரம் 0.12% குறைவு |
| 26 | சட்ட மன்ற உறுப்பினர் நிதி 2017-18<br>வார்டு எண்–53க்குட்பட்ட எஸ்.என்.ஆர் வீதி பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்தல்.<br>ந.க.எண். 5198/2017/எம்டி.5 | 2.50 | மா.ஆ.உ. நாள் 14.10.17 | 06.03.18 முதலாம் அழைப்பு | 1). திரு.ஜி அருள்குமரன் 0.17% குறைவு<br><br>2). திருமதி.எஸ். மணிமேகலை 0.43% குறைவு | திருமதி.எஸ். மணிமேகலை 0.43% குறைவு |
| 27 | வார்டு எண் 54 க்குட்பட்ட காளிங்கராயன் வீதி, ராஜாஜி சாலையில் பழுதடைந்த சாலையில் தார் ஒட்டு போடுதல்.<br>ந.க.எண். 959/2018/எம்டி.5 | 10.00 | ம.தீ.எண். 12 நாள் 29.01.18 | 05.03.18 முதலாம் அழைப்பு | 1).திரு.ஏ. அம்மாசையப்பன் 0.96 % அதிகம்<br>2). தி/ள் ரிவர் கிரீன் லேண்ட்ஸ்கேப் 0.02% குறைவு | தி/ள் ரிவர் கிரீன் லேண்ட்ஸ்கேப் 0.02% குறைவு |
| 28 | வார்டு எண்80 க்குட்பட்ட சுக்ரவார் பேட்டை சாலையில் தியாகி குமரன் வீதியில் இருந்து மின்சார வாரியம் அலுவலகம் வரை உள்ள பழுதடைந்த பாதாள சாக்கடை குழாய்கள் மாற்றியமைத்தல் மற்றும் சேம்பர்கள் புதுப்பித்தல்.<br>ந.க.எண். 6246/2017/எம்டி.5 | 15.00 | முன் அனுமதி நாள் 27.06.17 | 06.03.18 முதலாம் அழைப்பு | 1).தி/ள்.ஸ்ரீ குருவாயூரப்பன் அன் கோ 0.28% குறைவு<br><br>2). திரு.கே.சுந்தரம் மதிப்பீட்டு தொகை | தி/ள்.ஸ்ரீ குருவாயூரப்பன் அன் கோ 0.28% குறைவு |
| 29 | வார்டு எண் 68 க்குட்பட்ட முருகன் நகர் 80 அடி சாலை மூடுபலகையுடன் கூடிய மழைநீர் வடிகால் திரும்ப கட்டுதல்.<br>ந.க.எண். 962/2018/எம்டி.5 | 30.00 | ம.தீ.எண். 12 நாள் 29.01.18 | 27.02.18 முதலாம் அழைப்பு | 1).திரு.ஆர்.வி.பி பாலமுருகன் 0.04% குறைவு<br>2). தி/ள் என்.எம்.எஸ் இன்ஜினியர்ஸ் 0.56% அதிகம் | திரு.ஆர்.வி.பி பாலமுருகன் 0.04% குறைவு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 30 | சட்ட மன்ற உறுப்பினர் நிதி 2017-18<br>வார்டு எண்– 32 க்குட்பட்ட விளாங்குறிச்சி பகுதியில் 27 வாட்ஸ் சோலர் எல்.இ.டி விளக்குகள் பொருத்துதல்.<br>ந.க.எண். 11272/2017/எம்டி.5 | 1.80 | மா.ஆ.உ. நாள் 09.01.18 | 06.03.18 முதலாம் அழைப்பு | 1). தி/ள் ஸ்மார்ட் ஜோன் இன்டஸ்ட்ரீஸ் 0.06% அதிகம்<br><br>2). தி/ள் ஸ்வாட் அக்வாடெக் 0.005% குறைவு | தி/ள் ஸ்வாட் அக்வாடெக் 0.005% குறைவு |
| 31 | சட்ட மன்ற உறுப்பினர் நிதி 2017-18<br>வார்டு எண்– 74 க்குட்பட்ட வீரப்ப தேவர் காலனியில் ஆழ்குழாய் கிணறு அமைத்து பகிர்மான குழாய் அமைத்தல்.<br>ந.க.எண். 5212/2017/எம்டி.5 | 2.50 | மா.ஆ.உ. நாள் 14.10.17 | 06.03.18 முதலாம் அழைப்பு | 1). திரு.ஜி அருள்குமரன் 0.001% அதிகம்<br><br>2). திருமதி.எஸ். மணிமேகலை 2.23% குறைவு | திருமதி.எஸ். மணிமேகலை 2.23% குறைவு |
| 32 | சட்ட மன்ற உறுப்பினர் நிதி 2017-18<br>வார்டு எண்– 44 க்குட்பட்ட நேதாஜி நகர் மற்றும் கணேஷ் லே அவுட் பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்தல் மற்றும் கிணற்று நீர் குழாய் பதித்தல்<br>ந.க.எண். 10395/2017/எம்டி.5 | 9.50 | மா.ஆ.உ. நாள் 23.12.17 | 06.03.18 முதலாம் அழைப்பு | 1). திரு.ஜி அருள்குமரன் 0.04 % குறைவு<br><br>2). திரு .எம்.தண்டபாணி 3.91% அதிகம் | திரு.ஜி அருள்குமரன் 0.04 % குறைவு |
| 33 | சட்ட மன்ற உறுப்பினர் நிதி 2017-18<br>வார்டு எண்– 53 க்குட்பட்ட நந்த கோபால் வீதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்தல்<br>ந.க.எண். 5268/2017/எம்டி.5 | 2.50 | மா.ஆ.உ. நாள் 14.10.17 | 06.03.18 முதலாம் அழைப்பு | 1). திரு.ஜி அருள்குமரன் 0.17% குறைவு<br><br>2). திருமதி.எஸ். மணிமேகலை 0.43% குறைவு | திருமதி.எஸ். மணிமேகலை 0.43% குறைவு |
| 34 | வார்டு எண் 25 க்குட்பட்ட பகுதியில் மின்சார கேபிள்கள் போடப்பட்ட இடங்களில் தார் பேட்ச் போடுதல்<br>ந.க.எண். 949/2018/எம்டி.5 | 18.00 | ம.தீ.எண். 12 நாள் 29.01.18 | 07.03.18 முதலாம் அழைப்பு | 1).தி/ள் எஸ்.கே.எம்.எஸ் கன்ஸ்ட்ரக்சன்ஸ் 9.28 % அதிகம்<br><br>2). தி/ள் ரிவர் கிரீன் லேண்ட்ஸ்கேப் 0.02% குறைவு | தி/ள் ரிவர் கிரீன் லேண்ட்ஸ்கேப் 0.02% குறைவு |
| 35 | வார்டு எண்.85 க்குட்பட்ட பகுதியில் தார் ஒட்டுப்போடுதல்<br>ந.க.எண். 944/2018/எம்டி.4 | 9.80 | ம.தீ.எண். 11 நாள் 29.01.18 | 02.03.18 முதலாம் அழைப்பு | 1).தி/ள் ஏ.பி.ஆர். கன்ஸ்ட்ரக்சன்ஸ் 0.77 % அதிகம்<br><br>2). திரு.கே,மணி 0.12% குறைவு | திரு.கே,மணி 0.12% குறைவு |
| 36 | சட்ட மன்ற உறுப்பினர் நிதி 2017-18<br>மாவட்ட கண்காணிப்பு காவலர் அலுவலகத்தில் (இடதுபுறம்) சோலார் பவர் பிளான்ட் (10 Kwp வடிவமைத்து பொருத்தி பராமரித்தல்<br>ந..எண். 8393/2017/எம்டி.5 | 8.50 | மா.ஆ.உ. நாள் 23.11.17 | 06.03.18 இரண்டாம் அழைப்பு | 1). தி/ள் எஸ்பென் எண்டர்பிரைசஸ் 0.06% குறைவு<br><br>2). தி/ள் ரிலையன்ட் குளோபல் கிரீன் எனர்ஜி 0.63% அதிகம் | தி/ள் எஸ்பென் எண்டர்பிரைசஸ் 0.06% குறைவு |
| 37 | வார்டு எண்.82 க்குட்பட்ட ஈஸ்வரன் கோவில் வீதி மற்றும் பழையகட் ரோடு. நாயுடு வீதி 1,2 பாஸ்கரன் வீதி ஆகிய பகுதிகளில் தார்சாலை செப்பனிடுதல்.<br><br>ந.க.எண். 1009/2018/எம்டி.5 | 15.00 | ம.தீ.எண். 12 நாள் 29.01.18 | 09.03.18 முதலாம் அழைப்பு | 1). திரு.ஏ.ராஜு 0.89% குறைவு<br><br>2). திரு. ஜி.அசோக்குமார் 2.21% அதிகம் | திரு.ஏ.ராஜு 0.25% குறைவு (விலை குறைப்பிற்கு பின்) |

மேற்படி, பட்டியலில் உள்ள இப்பணிகளின் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கவும், மேற்படி பணிகளில் அவசர அவசியம் கருதி வழங்கப்பட்ட நிர்வாக முன்அனுமதிக்கு பின்னேற்பு வேண்டியும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம். ந.க.எண்.10946/2017/எம்.டி.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 83 நாள் 04.04.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 6

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – தெற்கு மண்டலம் 2018-2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர குத்தகை இனங்களுக்கு பொது மின் ஏலம் மற்றும் ஓப்பந்தப்புள்ளி கோரவும் மற்றும் உரிமம் புதுப்பிப்பு செய்வது – தொடர்பாக.

பார்வை : அரசாணை எண் 78 ந.நி.ம.கு.வ (மாந 2) துறை நாள்.25.05.2009

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட 2016-2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர குத்தகை இனங்களில் உரிமம் ஒப்படைப்பு செய்த இனங்களுக்கு அரசாணையின்படி குத்தகை தொகை 2018-2019 ஆம் ஆண்டிற்க்கு 5% உயர்வு செய்து உரிமம் புதுப்பிப்பு செய்யப்பட வேன்டியுள்ளது.

1. உரிமம் புதுப்பிக்கப்பட வேண்டிய குத்தகை இனங்கள்

| வ. எண் | வ.வி.எண் | குத்தகை இனம் | குத்தகை காலம் | குத்தகைதாரர் பெயர் | கேட்பு 2017-2018 | 5% வரி உயர்வு செய்யப்பட்ட கேட்பு 2018-2019 (ரூ.) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 77 | செட்டி வீதி கட்டண கழிப்பிடம் | 2018-2019 (மூன்றாம் ஆண்டு) | திரு. அப்பாஸ் | 3,56,265/- | 3,74,078/- |
| 2 | 29 | லாரிப்பேட்டை நுழைவு கட்டணம் | 2018-2019 (மூன்றாம் ஆண்டு) | திரு. ஆப்துல் சுக்கூர் | 3,68,550/- | 3,86,978/- |
| 3 | 30 | லாரிப்பேட்டை கட்டன் கழிப்பிடம் | 2018-2019 (இரன்டாம் ஆண்டு) | திரு.பஷீர் | 75,100/- | 78,855/- |
| 4 | 92 | சின்னசுடுகாடு கட்டண கழிப்பிடம் | 2018-2019 (மூன்றாம் ஆண்டு) | திரு.அன்புராஜ் | 1,20,806/- | 1,26,846/- |
| 5 | 97 | தக்காளி மாாக்கெட் ஏல மேடை | 2018-2019 (இரன்டாம் ஆண்டு) | திரு. ஆர்.பழனிச்சாமி | 6,51,101/- | 6,83,656/- |
| 6 | 108 | தக்காளி மாாக்கெட் கட்டண கழிப்பிடம் | 2018-2019 (மூன்றாம் ஆண்டு) | திரு. அன்புராஜ் | 2,50,950/- | 2,63,498/- |

மேற்குறிப்பிட்டுள்ளவாறு உரிமம் புதுப்பிக்கபட வேண்டிய 6 ஏல இனங்களுக்கு 2018-2019 ஆம் ஆண்டிற்கு உரிமம் 5% உயர்வு செய்து புதுப்பிப்பு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கபடுகிறது.

அலுவலககுறிப்பு : அனுமதிக்கலாம் ந.க எண் 220/17/அ1(தெ)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 84 நாள் 04.04.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 7

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வணிக வளாகங்களில் காலியாக உள்ள கடைகளுக்கு பொது மின் ஏலம் மற்றும் ஓப்பந்தப்புள்ளி 06.03.2018 அன்று நடைபெற்றது. இதில் சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட் வணிக வளாக கடை எண்கள்.18,31,32,33 மற்றும் 34 மற்றும் வார்டு எண்.79 AA ஸ்கீம் ரோட்டில் உள்ள கடை எண் 2-க்கும் ஏலம் கோரப்பட்டது.

இதில் சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட்டில் கடை எண் 18 க்கு மட்டும் ஏல வைப்புத் தொகை செலுத்தி கீழ்கண்ட இரண்டு ஓப்பந்ததாரர்கள் ஓப்பந்தப்புள்ளி கோரியுள்ளனர். மற்ற வணிக கடைகளுக்கு ஏல வைப்பு தொகை ஏதும் பெறப்படவில்லை.

சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட் வணிக வளாக கடை எண்.18

| வ.எண் | ஏலதாரர் பெயர் | மாத வாடகை | அரசு மதிப்பு |
|---|---|---|---|
| 1 | 1) ஆர்.ரங்கசாமி | 4500/- | 4100/- |
| | 2) எம்.அன்புராஜ் | 4400/- | |

மேலும் சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட்டில் உள்ள கடை எண்கள். 31,32,33 மற்றும் 34-க்கும் வார்டு எண்.79 AA ஸ்கீம் ரோட்டில் உள்ள கடை 2-க்கும் மறுஏலம் கோரலாம்.

மேற்படி சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட் வணிக வளாக கடை எண் 18-க்கு திரு.ரங்கசாமி என்பவர் மாத வாடகையாக 4500/-க்கு ஓப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். மேலும் இத்தொகை அரசாங்க மதிப்பை காட்டிலும் ரூ.400/- அதிகமாக கோரியுள்ளதால் மேற்படியாளருக்கு சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட் கடை எண் 18-யை திரு.ஆர்.ரங்கசாமி என்பவருக்கு ஒதுக்கீடு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண் 210/17/ அ1 (தெ)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 85 நாள் 04.04.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 8

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலம் 2018-2021-ஆம் ஆண்டிற்கான வருடாந்திர குத்தகை இனங்களில் ஏலம் போகாத மற்றும் மூன்றாண்டு முடிவுற்ற ஏல இனங்களுக்கு பொது மின் ஏலம் மற்றும் ஓப்பந்தப்புள்ளி 20.03.2018 –ல் நடைபெற்றது. இதில் கீழ் குறிப்பிட்டுள்ள இரண்டு இனங்களுக்கு மட்டும் ஏலவைப்பு தொகை செலுத்தி ஏலத்தில் கலந்து கொண்டனர். மீதமுள்ள மூன்று இனங்களுக்கு ஏலவைப்பு தொகை ஏதும் பெறப்படவில்லை.

இனம் 1 . உக்கடம் ஆடு அறுவைமனை (கழிவு நீர் பண்ணை ) கட்டணம் வசூலிக்கும் உரிமம்

| வ.எண் | ஏலதாரர் பெயர் | ஏலத்தொகை | அரசு மதிப்பு |
|---|---|---|---|
| 1 | சி.ஆர். நடராஜன் | 4,50,555/- | 9,16,260/- |

இனம் 2. சுண்டக்காமுத்தூர் கட்டணக்கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம்

இனம் 3. குளத்துப்பாளையம் கட்டணக்கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம்

இனம் 4. சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட் குளிர்பதனக் கிடங்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம்

இனம் 5. தால் பேக்டரி கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம்

| வ.எண் | ஏலதாரர் பெயர் | ஏலத்தொகை | அரசு மதிப்பு |
|---|---|---|---|
| 1 | ஜி.ரங்கராஜ் | 2,12,000/- | 2,05,000/- |
| 2 | எம் அன்புராஜ் | 1,85,000/- | |

இனம் 1-ல் உள்ள ஆடு ஆறுவைமனை கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு ஏலதாரர் திரு. சி.ஆர்.நடராஜன் என்பவர் உயர்ந்தபட்சமாக ரூ.4,50,555/-க்கு ஓப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இத்தொகை அரசு மதிப்பை காட்டிலும் குறைவான ஏலத்தொகை கோரியுள்ளதால் மறு ஏலம் கோரலாம்.

இனம் 2 மற்றும் 3, 4-க்கு ஓப்பந்தப்புள்ளி ஏதும் பெறப்படவில்லை. எனவே மறு ஏலம் கோரலாம்.

இனம் 5 -ல் உள்ள தால் பேக்டரி கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு ஏலதாரர் திரு. ஜி.ரங்கராஜ் என்பவர் உயர்ந்தபட்சமாக ரூ.2,12,000/-க்கு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இத்தொகை அரசு மதிப்பை காட்டிலும் 7000/- அதிகமாக கோரியுள்ளதால் மேற்படியாளருக்கு தால் பேக்டரி கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமத்தினை திரு.ஜி.ரங்கராஜ் என்பவருக்கு ஒதுக்கீடு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு : அனுமதிக்கலாம் ந.க எண் 220/17/அ1(தெ)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 86 நாள் 04.04.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 9**

பொருள்: நிலம் – கோயம்புத்தூர் வடக்கு வட்டம் – வெள்ளக்கிணர் கிராமம் – சமூக நலத்துறையின் இருந்து வரும் க.ச.189/4ல் 0.16.0 ஹெக்டேர் (40 செண்ட்) நிலம் – கோயம்புத்தூர் அரசு பணிபுரியும் மகளிருக்கான தங்கும் விடுதி கட்டிடம் கட்டுவதற்கான நிலமாற்றம் – முன்மொழிவுகள் அனுப்பிட மாநகராட்சியின் தீர்மானம் கோரியது தொடர்பாக.

பார்வை: வட்டாட்சியர், கோயம்புத்தூர் வடக்கு அவர்களின் கடிதம் ந.க.14599/2017/அ8, நாள்.09.03.2018.

*******

பார்வையில் காண் கடிதத்தில், கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு வட்டம், வெள்ளக்கிணர் கிராமம் அனாதை இல்லம் கட்டுவதற்காக கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிலமாற்றம் செய்து கிராம நிர்வாக ஆவணங்களில் சமூக நலத்துறை அனாதை இல்லம் என பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், தற்போது சமூக நலத்துறையின் சுவாதினத்தில் இருந்து வரும் இடத்தில் தற்போது கட்டிடம் ஏதும் கட்டப்படாமல் காலியாக வைக்கப்பட்டுள்ளதால், இவ்விடத்தினையே பணிபுரியும் அரசு மகளிருக்கான தங்கும் விடுதி கட்டிடம் கட்ட வெள்ளக்கிணர் கிராமம் க.ச.189/4ல் 0.16.0 ஹெக் (40 செண்ட்) நிலத்தினை பரிந்துரை செய்து மாவட்ட ஆட்சியருக்கு முன்மொழிவுகள் சமர்ப்பிக்கும் பொருட்டு மாநகராட்சியின் தீர்மானம் நிறைவேற்றி தரக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி, வெள்ளக்கிணர் கிராமம் க.ச.189/4ல் 0.16.0 ஹெக் (40 செண்ட்) இடமானது கிராம ஆவணங்களில் சமூக நலத்துறை அனாதை இல்லம் என பதிவாகியுள்ளது. எனவே, மேற்கண்ட இடத்தில் பணிபுரியும் அரசு மகளிருக்கான தங்கும் விடுதி கட்டிடம் கட்ட ஒதுக்கீடு வழங்க மாநகராட்சியின் ஆட்சேபணையின்மை தெரிவிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.2749/2018/எம்.எச்.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 87 நாள் 04.04.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 10

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி – மாண்புமிகு பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா -மாநகராட்சி சார்பில் மாநகராட்சி பள்ளிகள் நகர் நல மையங்கள் மற்றும் 100 வார்டுகளில் உள்ள பொதுமக்கள் கலந்து கொள்ளுதல் - விளையாட்டு போட்டிகள் உட்பட பல்வேறு போட்டி நிகழ்ச்சிகள் நடத்தி முடிக்கப்பட்டது – செலவினத் தொகை ரூ.**2,01,851/-**வழங்கிட ஒப்புதல் வேண்டுதல் - தொடர்பாக

பார்வை
1) மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் ஆய்வுக் கூட்ட அறிவுரை நாள்.22.09.2017
2) மாவட்ட ஆட்சியர் கோவை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.19274,2017/1அ1 நாள்.05.10.2017.
3) ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.8836,2017/எம்.சி.7 நாள்.02.11.2017.
4) ஆணையாளர் அவர்களது அனுமதி நாள் :28.12.2017

---------

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரைகளின்படியும் மாவட்ட ஆட்சிதலைவர் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரைகளின்படியும் பார்வை (3)-ல் காணும் ஆணையாளர் அவர்ளின் செயல் முறை ஆணையின்படியும் கோவை மாவட்டத்தில் மாண்புமிகு பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவை சிறப்பாக நடத்தவும் அதன் பொருட்டு மாநகராட்சிக்குட்பட்ட 100 வார்டுகளில் உள்ள பொதுமக்கள் பங்கு பெறும் வகையில் வ.உ.சி பூங்கா மைதானத்தில் ஏழு விளையாட்டு போட்டிகளை நடத்த ஆணை பிறக்கப்பட்டு விளையாட்டு போட்டிகளை 25.11.2017 முதல் 27.11.2017 வரை நடத்தி முடிக்கப்பட்டது.

மேற்படி விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்கு மேடை அமைப்பு நாற்காலிகள் போன்றவை ஏற்பாடு செய்வதற்காக ரூ.54740/–ம் விளையாட்டுப் போட்டிகளை நடத்திய நடுவர்களுக்கான கட்டணம், விளையாட்டு உபகரணங்கள் உள்ளிட்ட செலவினங்களுக்காக ஆக மொத்தம் ரூ.2,01,851/-க்கான பட்டியல் தொகைகளை வழங்க மாமன்ற அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க. எண். 6054/ 2017/ அ7(ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 88 நாள் 04.04.2018</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 11

**பொருள்:-** கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம் - ஒப்பந்ததாரர்க்கு காலாவதியான 2 பணிகளுக்கான FSD தொகையை வழங்குவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டுவது – தொடர்பாக.

**பார்வை:-**
1. அரசு ஆணை எம்.எஸ்.ஏ2 .எண்.621 ஊ.வ.மற்றும் உள்ளாட்சி துறை நாள்.08.04.1980.
2. டேவணித்தொகை வழங்க கோரிய 2 விண்ணப்பங்கள்.

---------------

கோயம்புத்தூர் மாநகராட்சி, மத்திய மண்டலம், முடிக்கப்பட்ட பணிகள் தொடர்பாக ஒப்பந்ததாரர்கள் FSD தொகையை திரும்ப பெற விண்ணப்பித்துள்ளார். அவர்கள் விண்ணப்பித்த 2 பணிகளுக்கான FSD தொகை செலுத்தி மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டதால் டேவணித்தொகையினை திரும்ப வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதல் பெற வேண்டியுள்ளது.

ஒப்பந்ததாரர் செலுத்திய டேவணித் தொகை விபரம் கீழ்வருமாறு

| வ. எண் | ஆண்டு | ஒப்பந்த தாரர் பெயர் | பணி | செலுத்திய சீட்டு எண் நாள் | தொகை ரூ. | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2014-15 | S.ராஜு | குருசாமி நகரில் பூங்கா அமைத்தல் | 201408142876 14.08.2014 | 111377/- | |
| 2 | 2014-15 | S. ராஜு | குருசாமி நகரில் பூங்கா அமைத்தல் | 201408142900 14.08.2014 | 9980/- | |

மேற்காணும் பணிகள் முடிக்கப்பட்டு, பணி தொடர்பான தணிக்கை தடை ஏதும் இல்லை. எனவே, மேற்காண் ஒப்பந்ததாரர்களுக்கு மூன்று ஆண்டுகள் கடந்து காலாவதியான FSD தொகையை வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்: 5614 /2017/அ8 (ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 89 நாள் 04.04.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 12

பொருள்:- கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம் - திரு.D.ஆறுமுகம்(லேட்) குழாய் பொருத்துநர் - குழாய் பொருத்துநர் உரிமம் பெறுவதற்கு செலுத்திய காப்புத் தொகை காலாவதியானது தொகையை வாரிசுதாரருக்கு வழங்குவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டுவது – தொடர்பாக.

பார்வை:-
1. அரசு ஆணை எம்.எஸ்.ஏ2 .எண்.621 ஊ.வ.மற்றும் உள்ளாட்சி துறை நாள்.08.04.1980.
2. காப்புத் தொகை வழங்க கோரிய விண்ணப்பம்.நாள்19.07.17.

----------------

